# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

## தளி வடக்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** ந.ஹரிஷ், சின்ன மேனகரம், தேன்கனிக்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.சுனில், தண்டரை, தேன்கனிக்கோட்டை. (2) மு.முருகேசன், கலுகொண்டப் பள்ளி, தேன்கனிக்கோட்டை. (3) பி.லோகேஷ், கும்மளாபுரம், தேன்கனிக்கோட்டை. (4) அ.மோகன்குமார், மதகொண்டப் பள்ளி, தேன்கனிக்கோட்டை. (5) மு.பிரபு, பின்னமங்கலம், தேனிக்கனிகோட்டை. (6) சூ.சுனில்குமார், உச்சனப்பள்ளி, தேன்கனிக்கோட்டை.

## தளி தெற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** செ.சென்னீரப்பா, சின்னதோகேரி, தேன்கனிக்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.மல்லேஷ், தளி, கொத்தனூர், தேன்கனிக்கோட்டை. (2) எஸ்.ஆர்.மஞ்சுநாத், சாவரப்பத்தம், தேன்கனிக்கோட்டை. (3) மூ.தர்ஷன், வனகனிப்பள்ளி, தேன்கனிக்கோட்டை. (4) கி.பாலாஜி, பாலதோட்டனப்பள்ளி, தேன்கனிக்கோட்டை, தளி, கிருஷ்ணகிரி. (5) கோ.ரவிகுமார், தேவருலிமங்கலம், தேன்கனிக்கோட்டை, தளி, கிருஷ்ணகிரி.

## அஞ்செட்டி ஒன்றியம்

**அமைப்பாளர் :** சி.வீரபத்திரய்யா, தேவேகவுண்டன்தொட்டி, அஞ்செட்டி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ம.பெரியநாயகம் (எ) கலைஞர், சேசுராஜபுரம், அஞ்செட்டி. (2) கோ.வெங்கடேஷ், பூதட்டிக் கொட்டாய், அஞ்செட்டி. (3) ந.வெங்கடேஷ், காடுசுப்பள்ளி, அஞ்செட்டி. (4) மா.திருமூர்த்தி, இராமர் கோயில், அஞ்செட்டி. (5) ர.ரங்கராஜ், தக்கட்டி, அஞ்செட்டி. (6) ப.அருண், உரிகம், அஞ்செட்டி. (7) சி.சுதீப், அண்ணா சாலை, அஞ்செட்டி.

## கெலமங்கலம் கிழக்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** சி.கணேசன், எடவனஅள்ளி, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மா.பழனி, கொப்பக்கரை, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி. (2) கோ.விஜயகுமார், சின்ன உள்ளுகுறுக்கை, தேன்கனிக்கோட்டை. (3) சு.அருண், ரகுமத் காலனி, இராயக்கோட்டை, சூளகிரி, கிருஷ்ணகிரி. (4) வெ.சங்கர், மொள்ளம்பட்டி. சூளகிரி, கிருஷ்ணகிரி. (5) மு.முனிராஜ், பழையூர், இராயக்கோட்டை, சூளகிரி, கிருஷ்ணகிரி. (6) மு.மணிகண்டன், கீழ்த்தெரு, இராயக்கோட்டை, சூளகிரி, கிருஷ்ணகிரி. (7) மு.சசிக்குமார், 2/89, லிங்கனம்பட்டி, கொப்பக்கரை, தேனிகனிக்கோட்டை, கிருஷ்ணகிரி. (8) சீ.பாலாஜி, யு.கொத்தப்பள்ளி, தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி.

## கெலமங்கலம் மேற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** ஜா.கில்ட்டன், இருதுக்கோட்டை, தேன்கனிக்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) தி.முனிராஜ், சாப்பராணப்பள்ளி, தேன்கனிக்கோட்டை. (2) கி.புருஷோத்தம், ஒன்னுகுருக்கி, தேன்கனிக்கோட்டை. (3) மு.கனகராஜ், தொட்டபேளூர், தேன்கனிக்கோட்டை. (4) ச.முத்துராஜ், சின்னபாலகுளி, தேன்கனிக்கோட்டை. (5) ரா.தனபால், கோட்டைஉளி, மங்கலம், தேன்கனிக்கோட்டை. (6) தி.விணுக்குமார், கல்லியூர், தேன்கனிக்கோட்டை.

## ஒசூர் ஒன்றியம்

**அமைப்பாளர் :** மு.ஹரிஸ்குமார், கர்ணப்பள்ளி, ஒசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ரா.கிரண்குமார், 257/3, நவதி, எச்.சி.எஃப்., ஒசூர், கிருஷ்ணகிரி. (2) ஆ.மகேஷ்வரன், தேர்ப்பேட்டை, பாகலூர், ஒசூர். (3) கி.சந்தோஷ்குமார், குமுதேப்பள்ளி, ஒசூர். (4) மு.நரேந்திரன், கோவிந்த அக்ரஹாரம், ஒசூர். (5) மு.சுரேஷ், நாகொண்டப்பள்ளி, ஒசூர். (6) ரா.மஞ்சுநாத், நல்லூர், ஒசூர். (7) பா.நவீன்குமார், 2/1, இடையநல்லூர், மத்திகிரி, ஒசூர். (8) கோ.சிவகுமார், 1/405, எழில் நகர், பேகப்பள்ளி, ஒசூர், கிருஷ்ணகிரி.

## சூளகிரி வடக்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** பெ.மகேந்திரன் (எ) பத்ரி, கடத்தூர், சூளகிரி, கிருஷ்ணகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) லி.மணி, பேரிகை, சூளகிரி, கிருஷ்ணகிரி. (2) சி.நாகபூஷ்ணம், 1/43, அடுகுறுக்கை, காமத்தொட்டி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (3) ச.மகேஷ், எ.கொத்தூர், சூளகிரி, கிருஷ்ணகிரி. (4) மு.பாலாஜி, காமன்தொட்டி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (5) நா.சீனிவாசன், புன்னகரம், தோரிப்பள்ளி (அ), சூளகிரி, கிருஷ்ணகிரி. (6) கி.சித்தராஜ், திராடி, பேரிகை (அ), சூளகிரி, கிருஷ்ணகிரி. (7) ர.சீனிவாசன், 5/646, வேம்பள்ளி, சென்னப்பள்ளி, மருதாண்டப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி.

## சூளகிரி தெற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** மா.ராஜ்குமார், இம்மிடிநாயக்கனப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) பொ.ஜெயராமன், மேடுப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (2) ஸ்ரீ.சதீஷ்குமார், கீழ்த் தெரு, சூளகிரி, கிருஷ்ணகிரி. (3) கு.திவாகர், கீழ்த் தெரு, சூளகிரி, கிருஷ்ணகிரி. (4) சி.கார்த்திக், சிம்பல்திராடி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (5) க.சந்திரசேகர், 1/2, ஒமதேப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (6) கூ.பாக்கியராஜ், மேடுபள்ளி, சூளகிரி. (7) சு.ஹரிஸ்குமார், சாணமாவு, போடிச்சிப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி. (8) எ.சரத்குமார், சின்னபேடப்பள்ளி, சூளகிரி, கிருஷ்ணகிரி.

## வேப்பனஹள்ளி கிழக்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** ச.பாஸ்கர், வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ஜே.கே.இலியாஸ், வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி. (2) ரா.திருமூர்த்தி, ராமச்சந்திரம், வி.மாதேப்பள்ளி, கிருஷ்ணகிரி. (3) கி.ரஜினிகாந்த், வி.ரோஜனப்பள்ளி, நெடுமருதி, கிருஷ்ணகிரி. (4) மா.ராஜா, கோதிகுட்டலப்பள்ளி, எம்.சி.பள்ளி, கிருஷ்ணகிரி. (5) அ.ஸ்டாலின், சிந்துகாம்பள்ளி, மகாராஜாகடை, கிருஷ்ணகிரி. (6) வெ.பாலசுப்பிரமணி, சின்னபொம்மராசப்பள்ளி, வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி. (7) எஸ்.எம்.ஷேக் உம்ரான் பாஷா, 2/464, மதீனா மஜீத் தெரு, வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி.

## வேப்பனஹள்ளி மேற்கு ஒன்றியம்

**அமைப்பாளர் :** வெ.ராஜா, ஜேடுகொத்தூர், கிருஷ்ணகிரி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) தி.ரவி, எட்டிப்பள்ளி, கிருஷ்ணகிரி. (2) வே.வடிவேல்குமார், ஆவல்நத்தம், கிருஷ்ணகிரி. (3) மு.ஈஸ்வரன், பாராமல், கிருஷ்ணகிரி. (4) ப.நவீன்ராஜ், குப்பச்சிப்பாறை, கிருஷ்ணகிரி. (5) வெ.விஜய்குமார், பாறையூர், கிருஷ்ணகிரி. (6) ஜா.விஜய்குமார், பெரியபத்தலப்பள்ளி, கிருஷ்ணகிரி. (7) மு.வடிவேல், தேவரகுந்தாணி, கிருஷ்ணகிரி. (8) சு.ரஜினி, ஒட்டப்பள்ளி, கிருஷ்ணகிரி.

## ஒசூர் தெற்குப் பகுதி

**அமைப்பாளர் :** எஸ்.கே.சூர்யா, 51, வாசவி நகர், தின்னூர், ஒசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) சீ.நாகராஜன், 109/2, பேருந்து நிலையம் அருகில், குருப்படி, மத்திகிரி (அ), ஒசூர். (2) ம.மோகன்குமார், 371/702, எல்.ஐ.ஜி.ஆர்.கே. அட்கோ, ஒசூர். (3) சி.ரவி, 48/4, அம்மன் நகர், ஐ.டி.ஐ., ஒசூர். (4) அ.இனியன், புதிய ராயக்கோட்டை சாலை, அட்கோ, ஒசூர். (5) மு.கார்த்திக், எல்.ஐ.ஜி.–618, வ.உ.சி. நகர், ஒசூர். (6) மு.சுரேஷ், 128, கர்னூர், ஒசூர். (7) வெ.விவேக், 40/143, நேதாஜி நகர், மத்திகிரி, ஒசூர். (8) கோ.மூர்த்தி, 69, காடிப்பாளையம், மத்திகிரி, ஒசூர்.

## ஒசூர் வடக்குப் பகுதி

**அமைப்பாளர் :** ரா.யுவராஜ், 6/111, கொத்தூர், ஒசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மூ.சுனில்குமார், மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (2) அ.சுதாகர், 1/326–1, நாகம்மா தெரு, மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (3) பூ.திலீப்குமார், 1091/81, தேசிங்கு நகர், மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (4) மா.முனிராஜ், 2/377, எம்.எம்.நகர், மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (5) த.ரகுராமன், 59–ஏ, 6–வது தெரு, வெங்கடேஷ்வரா நகர், டைட்டன் பின்புறம், ஒசூர். (6) தா.ராஜி, 375, ஏ–பி, சிவாஜி நகர், முதல் குறுக்குத் தெரு, மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (7) மா.ஹரிஷ், மத்தம் அக்ஹாரம், மூக்கண்டப்பள்ளி, ஒசூர். (8) பா.சுரேஷ், 1/351, எம்.ஜி.ஆர்.நகர், மூக்கண்டப் பள்ளி, ஒசூர், கிருஷ்ணகிரி.

## ஒசூர் கிழக்குப் பகுதி

**அமைப்பாளர் :** வே.மணிகண்டன், ஏ.எஸ்.டி.சி. டவுன், ராம் நகர், ஒசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) யா.முபாரக் யாரஃப் ஜான், கும்பார்பேட், ஒசூர். (2) மு.ஸ்ரீதர், மீனாட்சி நகர், ஒசூர். (3) வெ.வினோத்குமார், ராஜீவ் தெரு, ஒசூர். (3) நா.நவீன் குமார், பார்வதி நகர், ஒசூர். (4) நா.சுனில்குமார், பார்வதி நகர், ஒசூர். (5) ச.விக்னேஷ், 104/7, பார்வதி நகர், ஒசூர். (6) அ.யாசர் அகமது, 109/7, ராஜகணபதி நகர், ராயக் கோட்டை ரோடு, ஒசூர். (7) எம்.டி.சுஹேல், இமாம்படா, ஒசூர், கிருஷ்ணகிரி.

## ஒசூர் மேற்குப் பகுதி

**அமைப்பாளர் :** சு.பாலாஜி, ஹெச்–11, ஆவலப்பள்ளி வீட்டு வசதி குடியிருப்பு, ஒசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) வெ.கிரிஷ், 73, ஜெ.ஜெ,நகர், ஒசூர். (2) கி.விஜயராஜ், 1/189, உப்கார் ராயல் கார்டன், ஜூ.ஜூ வாடி, ஒசூர். (3) ச.வினோத்குமார், 3/321, பாரதியார் நகர், ஒசூர். (4) தி.நந்தீஸ், கணேஷ் நகர், ஒசூர். (5) து.விஜயகாந்த், அண்ணா நகர், ஒசூர். (6) கே.புஷ்பராஜ், 1/189, மாருதி நகர், ஜூ.ஜூ. வாடி, ஒசூர். (7) து.ஜெய்சந்தோஷ், 49, அண்ணா நகர், பேட்டரப்பள்ளி, ஒசூர். (8) ஆ.சுனில்குமார், டாக்டர் அம்பேத்கர் குடியிருப்பு, ஒசூர்.

## தேன்கனிக்கோட்டை பேரூர்

**அமைப்பாளர் :** ஆ.சேகர், காந்தி ரோடு, தேன்கனிக்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) லி.அழகப்பன், நேதாஜி நகர், தேனிக்கனிக்கோட்டை. (2) ச.சின்னதம்பி, பட்டாளம்மன் கோயில் தெரு, தேன்கனிக்கோட்டை. (3) அ.சந்தோஷ்குமார், மாதா கோயில் தெரு, தேன்கனிக்கோட்டை. (4) சை.முஸ்தாக் அகமது, ஆசாத் தெரு, தேனிக்கனிக்கோட்டை. (5) ஜெ.அம்ரீஷ், 61/2, எம்,ஜி.ஆர். நகர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி.

## கெலமங்கலம் பேரூர்

**அமைப்பாளர் :** ரா.மிதுன் சக்கரவர்த்தி, மாரியம்மன் கோயில் தெரு, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கி.ராஜாமணி, காந்தி நகர், கெலமங்கலம், தேனிக்கனிக்கோட்டை. (2) ச.பவன் கல்யாண், அண்ணா நகர், கெலமங்கலம், தேனிக்கனிக்கோட்டை. (3) வெ.சசிகுமார், பட்டாளம்மன் கோயில் தெரு, கெலமங்கலம், தேனிக்கனிக்கோட்டை. (4) ரா.நாராயணசாமி, நேதாஜி நகர், கெலமங்கலம், தேனிக்கனிக்கோட்டை. (5) அ.நசீர் பாஷா, மகாத்மா காந்தி சாலை, கெலமங்கலம், தேனிக்கனிக் கோட்டை.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 04–05–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

# பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள்: 'தமிழ் வார விழா' நிறைவு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, மே 5-

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் - 'தமிழ் வார விழா' நிறைவு விழா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (05.05. 2025) கலைவாணர் அரங்கில் நடைபெறுகிறது.

முதலமைச்சர் அவர்களால் 22.4. 2025 அன்று சட்டமன்ற பேரவையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ், 'பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏப்ரல் 29 முதல் மே 5 வரை தமிழ் வார விழா கொண்டாடப்படும்' எனவும், இவ்விழாவில் கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள், பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது, தமிழ் இலக்கியம் போற்றுவோம், பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள், தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடப்படும் என்ற அறிவிப்பு வெளியிட்டார்கள்.

தமிழ் வளர்ச்சித்துறை, செய்தித்துறை, கலை பண்பாட்டுத்துறை என பல்வேறு அரசு துறைகள் இணைந்து இத்திட்டத்தினை 29.4.2025 முதல் 5.5.2 025 வரை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கவியரங்கங்கள், இலக்கிய கருத்தரங்குகள், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, கலைப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் வார விழாவின் நிறைவு விழா 5.5.2025 காலை 10.30 மணியளவில் சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் முன்னிலை வகிக்க உள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித்துறையின் வாயிலாக 5 சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியதன் தொடர்பாக அவர்களின் குடும்பத்தினருக்குப் பரிவுத் தொகையும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி முதலமைச்சர் அவர்கள் விழா பேருரையாற்றுகிறார்கள்.

இவ்விழாவில் பல்லவி இசைக்குழுவின் வாயிலாக 'பாவேந்தரின் எழுச்சி பாடல்களும்', நரேந்திர குமார் நடன அமைப்பில் சென்னை தமிழ் நாடு அரசு இசைக்கல்லூரி மாணவியர்களின் 'தமிழ் அமுதுநாட்டிய நிகழ்ச்சி'யும், அனார்த்தனா குழுவினரின் 'சங்கே முழங்கு' மாபெரும் நடன நிகழ்ச்சியும், கலைமாமணி திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களின் தலைமையில் 'பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களில் விஞ்சி நிற்பது மொழி உணர்வா! சமூக உணர்வா! என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளன.

பாவேந்தருக்கு பெருமை சேர்க்கும் வகையில் நடத்தப்படும் இவ்விழாவில் தமிழ் ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் இரயில் நிலையத்தில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்து தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு. கல்யாணசுந்தரம், தென்னக ரயில்வே திருச்சி கோட்ட மேலாளர் அன்பழகன் ஆகியோர் கலந்துரையாடல் மேற்கொண்டு திருநாகேஸ்வரம் ரயில் நிலையம் அருகில் ரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் குட்ஷெட் அமைக்கலாமா எனவும், காங்கேயன்பேட்டை கிராஸிங் சுரங்கம் அமைப்பது தொடர்பாக இடங்களை நேரில் பார்வையிட்டனர். அப்போது முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, சார் ஆட்சியர் ஹிருத்யா விஜயன், ரதிப்ரியா, டி.கணேசன், ஜெ.சுதாகர், சுந்தர.ஜெயபால் மற்றும் கழக நிர்வாகிகள் ரயில் சங்க நிர்வாகிகள் சத்தியநாராயணன், சரவணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில் பங்கேற்றிட

# மதுராந்தகம் வருகை தரும் முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பு!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கை!

காஞ்சிபுரம், மே 5-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகத்தில் இன்று (மே 5 ஆம் தேதி) மாலை 5 மணி அளவில் நடைபெறும் வணிகர் கோரிக்கை பிரகடன மாநாட்டில் பங்கேற்றிட வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கருங்குழி மேலவலம்பேட்டையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்படவிருப்பதால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ளும் படி மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் வணிகர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வணிகர்கள் நல வாரியத்தை உருவாக்கி அதில் உறுப்பினர்களாக அனைவரையும் சேர்த்து பயன் அடைய பல்வேறு முயற்சிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செய்து வருகிறது.

வணிகர்களுக்காக முதன் முறையாக 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வணிகர் நல வாரியம் உருவாக்கப்பட்டு, நல வாரியத்தில் அனைத்து வணிகர்களையும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.



அவர் வழியில் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும் பல்வேறு திட்டங்களை வணிகர்களுக்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் வணிகர் நல நிதியில் குடும்ப நல நிதி உயர்த்தப்பட்டது. மருத்துவ நிதி உதவி திட்டத்தின் கீழ் இதயம் மற்றும் புற்று நோய் அறுவை சிகிச்சைக்கு நிதி உதவி உயர்த்தப்பட்டுள்ளது, பெண்களுக்கான கருப்பை அறுவை சிகிச்சைக்கு நிதி உதவி, வணிகர்களின் குழந்தைகளுக்கு கல்வி கற்றிட ஏதுவாக கல்வி உதவித் தொகை, தொழில் கல்வி கற்றிட நிதி உதவி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் படிக்கும் மாணவர்களுக்கு நிதி உதவி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிதி உதவிகளை வழங்கி வணிகர்களின் குடும்பத்தினர் வாழ்வில் விளக்கேற்றி வைத்து உள்ளார்.

அதன் ஒரு படியாக இன்றைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வணிகர்கள் நல வாரியத்தில் வணிகர்கள் அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும், அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி வருகிறார்.

அப்படி பட்ட வணிகர்களுக்கு இன்று (மே 5 ஆம் தேதி) வணிகர் தினம் ஆகும். அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மே 5 ஆம் தேதி 42 வது வணிகர் தினமாகும்.

இதனை முன்னிட்டு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, மாநிலத் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா தலைமையில் இன்று (5.5.2025) திங்கட்கிழமை மாலை, திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை மதுராந்தகத்தில் மாபெரும் வணிகர் கோரிக்கை பிரகடன மாநாடு நடைபெறுகின்றது.

இம் மாநாட்டில் பங்கேற்று சிறப்புரையாற்று வருகை தரும் நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (மே 5 ஆம் தேதி) மாலை 5 மணி அளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கருங்குழி மேலவலம்பேட்டையில் என் தலைமையில் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.) மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, நகர, பகுதி, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமை ப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகி கள் என்று கழக முன்னணித் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக இன்று (மே 5 ஆம் தேதி) மாலை 4.30 மணிக்கே கருங்குழி மேலவலம் பேட்டைக்கு வருகை தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.